# திருச்சி மாவட்ட செய்திகள்



திருச்சியில் உள்ள இந்திய மேலாண்மை நிறுவனத்தில் நடந்த பட்டமளிப்பு விழாவில் கவர்னர் ஆர்.என்.ரவி கலந்து கொண்டு பட்டம் வழங்கிய காட்சி.

### இந்திய மேலாண்மை நிறுவன பட்டமளிப்பு விழா:

# வல்லரசு நாடுகளின் பட்டியலில் இந்தியா இடம்பெற பாடுபட வேண்டும்

## இளைஞர்களுக்கு கவர்னர் ஆர்.என்.ரவி அறிவுறுத்தல்

திருச்சி, மார்ச்.30-

வல்லரசு நாடுகளின் பட்டியலில் இந்தியா இடம் பெற இளைஞர்கள் பாடுபட வேண்டும் என்று இந்திய மேலாண்மை நிறுவன பட்டமளிப்பு விழாவில் கவர்னர் ஆர்.என்.ரவி பேசினார்.

**பட்டமளிப்பு விழா**

திருச்சியில் உள்ள இந்திய மேலாண்மை நிறுவனத்தில் 13-வது பட்டமளிப்பு விழா நேற்று நடந்தது. விழாவுக்கு இந்திய மேலாண்மை நிறுவன ஆளுநர்கள் குழு தலைவர் ஜலஜ் தனி மற்றும் இயக்குனர் பவன் குமார் சிங் தலைமை தாங்கினர். விழாவில் சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு கவர்னர் ஆர்.என். ரவி கலந்துகொண்டு 457 மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கிபேசியதாவது:-

மாணவர்களாகிய நீங்கள், உங்களுக்கு கல்வி பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கு நன்றி கடன்பட்டுள்ளீர்கள். மாணவர்கள் உலகை தன்னம்பிக்கையோடு எதிர்கொள்ள வேண்டும். தற்போது நீங்கள் பட்டம் பெற்றுள்ள சமயம் இந்தியாவின் ஒரு பொன்னான காலமாக உள்ளது. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்புஇந்தியா வளர்ந்தநாடுகளின் பட்டியலில் இல்லை. ஆனால் தற்போது எந்த ஒரு முக்கியமான முடிவும் இந்தியாவின் ஆலோசனை இல்லாமல் மேற்கொள்ளப்படுவதில்லை. 10 ஆண்டுகளுக்கு முன்பு 500 ஆக இருந்த ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் தற்போது 1600-க்கும் மேல் உள்ளது. தமிழ்நாட்டில் 1.5 கோடி பேர் முத்ரா கடன் மூலம் பயனடைந்துள்ளனர். இதில் கிராமப்புறத்தைச் சேர்ந்த பெண்கள் அதிகமாக உள்ளனர்.

**வல்லரசு நாடுகளின் பட்டியலில்...**

செயற்கை நுண்ணறிவு, ரோபோட்டிக்ஸ், விண்வெளி, நானோ தொழில்நுட்பம், உயிரியல் தொழில்நுட்பம் ஆகிய அனைத்திலும் இந்திய இளைஞர்கள் உலகத்தில் சிறந்தவர்களாக உள்ளனர். இளைஞர்களின் கடமை பட்டம் பெற்று பணிக்கு செல்வதோடு முடிந்து விடக்கூடாது, இந்திய நாட்டின் வளர்ச்சிக்கு பாடுபட வேண்டும், இளைஞர்கள் உள்ளத்தையும், உடலையும் ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள வேண்டும். 2047-ம் ஆண்டு வல்லரசு நாடுகளின் பட்டியலில் இந்தியா இடம்பெற இளைஞர்கள் பாடுபட வேண்டும். இந்தியாவில் பெண்கள் எல்லா துறைகளிலும் சாதித்து வருகின்றனர்.

இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் இந்திய மேலாண்மை நிறுவனம் முதுநிலை மேலாண்மை பிரிவில் மொத்தம் 10 மாணவர்கள் தங்க பதக்கம் மற்றும் ரொக்கப் பரிசு பெற்றனர். இதில் பேராசிரியர்கள், மாணவர்களின் பெற்றோர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**கவர்னருக்கு வரவேற்பு**

முன்னதாக நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக திருச்சி விமான நிலையத்திற்கு வருகை தந்த கவர்னருக்கு திருச்சி மாவட்ட கலெக்டர் பிரதீப்குமார் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்.

INDIAN INSTITUTE OF MANAGEMENT
30 MAR 2025
TIRUCHIRAPPALLI - 24

Source : Daily Thanthi
Date : 30/03/2025
Page no : 06